**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 19.12.2023**

| | |
|---|---|
| **Name : அழகுதுரை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |

**(Accused 1– 3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

1) நான் தற்பொழுது தாரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.08.2020–ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் கிருஷ்ண சாமி நாயுடு மகன் மாணிக்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப **நி.கு.எண்.422/2020 u/Sec. 457, 380 IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 7** ஆகும். அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 க்கு அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை புலனாய்வுக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

2) புகார் கொடுத்தவுடன் முதல் தகவல் அறிக்கை பதிந்தேன் என்றால் சரிதான். சம்பவயிடம் பார்த்து வந்த பின்பு முதல் தகவல் அறிக்கை பதிந்தேனா என்றால் இல்லை. பதிவு செய்த பின்பு தான் சென்றேன். கைரேகை நிபுணர், மோப்ப நாய் பிரிவிற்கு தகவல் கொடுதது விசாரணை மேற்கொண்டேனா என்றால் இல்லை. நகைக்குண்டான ஆவணங்கள் எதுவும் புகார் கொடுக்கும்போது என்னிடம் எதுவும் வழங்கவிலலை என்றால் சரிதான். நான் முதல்தகவல் அறிக்கை பதிந்தவுடன் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**